අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# கர்நாடக சங்கீதம்

## புள்ளியிடும் திட்டம்



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

# கல்வி அமைச்சு

| 42 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

### புள்ளி வழங்கும் திட்டம்

### கர்நாடக சங்கீதம் I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | **3** | 11. | **4** | 21. | **3** | 31. | **1** |
| 02. | **1** | 12. | **1** | 22. | **2** | 32. | **3** |
| 03. | **4** | 13. | **3** | 23. | **3** | 33. | **2** |
| 04. | **2** | 14. | **2** | 24. | **4** | 34. | **2** |
| 05. | **1** | 15. | **4** | 25. | **1** | 35. | **4** |
| 06. | **3** | 16. | **1** | 26. | **3** | 36. | **3** |
| 07. | **2** | 17. | **3** | 27. | **2** | 37. | **1** |
| 08. | **4** | 18. | **2** | 28. | **4** | 38. | **2** |
| 09. | **3** | 19. | **4** | 29. | **2** | 39. | **4** |
| 10. | **2** | 20. | **1** | 30. | **4** | 40. | **3** |

(1X40=40 புள்ளிகள்)

### கர்நாடக சங்கீதம் II

01. i. *சியாமாசாஸ்திரிகள்*
ii. *வைணீகர்கள்*
iii. *கல்யாணி*
iv. *செந்துருத்தி*
v. *ஔடவராகம்*
vi. *கண்டசாபு*
vii. *சேந்தனார்*
viii. *"குருகுஹ"*
ix. *பாரி, திமிரி*
x. *சாதாரி, நட்டராகம்*

(1+1+1+1+1+1+1+1+2+2=12 புள்ளிகள்)

02.

I பந்துவராளி

- 51வது மேளராகம். பிரம்ம-கோ **என்பன குறிப்பிட்டிருப்பின் (1 புள்ளி)**
- ஆ - ஸரிகமபதநிஸ்

  அ - ஸ்நிதபமகரிஸ **(2 புள்ளி)**
- ஸ்வரஸ்தானம் - ஸட்ஜம், சுத்தரிக்ஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலிநிக்ஷாதம் **(2 புள்ளி)**
- சம்பூர்ணராகம், ஆரோகண அவரோகணத்தில் எல்லா ஸ்வரங்களும் இராகச்சாயாஸ்வரங்களாகவும் நியாசஸ்வரங்களாகவும் வரும்
- மத்திமத்தை சற்றுத் தீர்க்கமாக அசைத்துப் பாடலாம், பஞ்சமத்தில் நின்று சஞ்சாரம் செய்யலாம்,
- உருப்படிகள் ஸ, ப, நி ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.

**இவற்றுள் ஏதாவது இரண்டு விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (1 புள்ளி)**

- பதமா, தஸ்நிதபம என்பன விசேம சஞ்சாரங்கள்
- ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி ராகம்
- தாரஸ்தாயி காந்தாரத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம்
- பிரசித்தமான பிரதிமத்திம இராகங்களில் இதுவும் ஒன்று. விஸ்தாரமான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம்
- இது மாயாமாளவகௌளை இராகத்தின் நேர் பிரதிமத்திம ராகம்
- சாயாலக இராகங்களில் ஒன்று
- மூர்ச்சனாகார மேள இராகம். இதன் நிக்ஷாத மூர்ச்சனையே முதலாம் மேளகர்த்தாவாகிய கனகாங்கி ராகமாகும்.
- எப்பொழுதும் பாடலாம்
- பண் சாதாரி, நட்டராகம் என்பது இவ்விராகமே ஆகும்.
- ஹிந்துஸ்தானி இசையில் "பூர்விதாட்" என்று அழைக்கப்படும்.
- கருணைச்சுவையை வெளிப்படுத்தும் இராகம்.
- கடபஜாதி சங்கைக்காக "காமவர்த்தனி" என்று அழைக்கப்படுகின்றது.
- இவ்விராகத்திலமைந்த கிருதிகளைப் பாட கச்சேரி களை கட்டும்.

**இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (3 புள்ளி)**

சஞ்சாரம் - பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகள், அங்க அடையாளங்கள் பயன்படுத்ததி எழுதியிருப்பின் **(1 புள்ளி)**

உருப்படிகள் -

**பொருத்தமான எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் (2 புள்ளிகள்)**

**(1+2+2+1+3+1+2=12 புள்ளிகள்)**

II. ஆரபி

- 29வது மேளமாகிய சங்கராபரணத்தின் ஜன்னியம் **எனக் குறிப்பிட்டிருப்பின் (1 புள்ளி)**
- ஆ - ஸரிமபதஸ்

  அ - ஸ்நிதபமகரிஸ **(2 புள்ளி)**
- ஸ்வரஸ்தானம் - ஸட்ஜம், சதுஸ்ருதிரிக்ஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிக்ஷாதம்

**(2 புள்ளி)**

- இராகச்சாயா ஸ்வரங்கள் - ரி, ம, த

  நியாசஸ்வரங்கள் - ரி, ப

  கம்பிதஸ்வரங்கள் - ரி, த

  க்ரகஸ்வரங்கள் - ரி, ப, த

**இவற்றுள் ஏதாவது இரண்டு விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (1 புள்ளி)**

- வர்ஜராகம் ஆரோகணத்தில் மட்டும் காந்தாரம், நிக்ஷாதம் வர்ஜம்.
- ஔடவசம்பூர்ண இராகம் - உபாங்கராகம்.
- கனராகம் பிரசித்திபெற்ற கனபஞ்சக இராகங்களில் இதுவும் ஒன்று.
- இந்த இராகத்தின் சாயலை மத்திமகாலம் அல்லது தானம் வாசிப்பதன் மூலம் எளிதாக விளங்கிக் கொள்ளலம்.
- நி, க இந்த இராகத்தின் அல்ப ஸ்வரங்கள், நி இல்லாமலே சில உருப்படிகள் உள்ளன.
- காந்தாரம் ஒது துர்பலஸ்வரமாகும். இதனைத் தீர்க்கமாகவோ அழுத்தமாகவோ ஜண்டையாகவோ பிடிப்பது பொருந்தாது.
- மாகரிஸரீ என்பது ஒரு விசேட ரஞ்சகப் பிரயோகம்
- எப்பொழுதும் பாடலாம்.
- மங்களகரமான இராகம்
- கச்சேரியின் ஆரம்பத்தில் பாட ஏற்ற இராகம்
- மூர்ச்சனாகார ஜன்னிய ராகம். இதன் ரி, ம, ப ஸ்வரங்களை கிரகபேதம் செய்ய முறையே ஆபேரி, மோகனகல்யாணி, கேதாரகௌளை இராகங்கள் உண்டாகும்.
- பண் - பழந்தக்கராகம்
- ரௌத்ர ரசம் பொருந்திய ராகம்.

**இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (3 புள்ளி)**

- சஞ்சாரம் - பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகள், அங்க அடையாளங்கள் பயன்படுத்ததி எழுதியிருப்பின் **(1 புள்ளி)**
- உருப்படிகள் -

**பொருத்தமான எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் (2 புள்ளிகள்)**

**(1+2+2+1+3+1+2=12 புள்ளிகள்)**

iii. தோடி

- 8 வது மேளராகம். நேத்ர-ஸ்ரீ **என்பன குறிப்பிட்டிருப்பின் (1 புள்ளி)**
- ஆ - ஸரிகமபதநிஸ்

  அ - ஸ்நிதபமகரிஸ **(2 புள்ளி)**

- ஸ்வரஸ்தானம் - ஸட்ஜம், சுத்தரிக்ஷபம், சாதாரணகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், கைசிகிநிக்ஷாதம் **(2 புள்ளி)**
- இராகச்சாயாஸ்வரங்கள் - க, ம, த
- பஞ்சமவர்ஜ, ஜண்டைஸ்வரப்பிரயோகங்களும் நிக்ரிநி-தநிரிநிதம-ககமநிதமகரிஸ போன்ற தாட்டுஸ்வரப்பிரயோகங்களும் ராகரஞ்சகமானவை
- தரிஸ்தா-ரிஸ்தா போன்ற சஞ்சாரங்கள் விசேடப்பிரயோகங்களாகும்.
- பஞ்சமத்தில் நின்று சஞ்சாரம் செய்யலாம்.

**இவற்றுள் எவையேனும் 2 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (1 புள்ளி)**

- மூர்ச்சனாகாரக மேளராகம். ரி, க, ம, த, நி ஆகிய ஸ்வரங்களைக் கிரகபேதம் செய்ய முறையே கல்யாணி, கரிகாம்போதி, நடபைரவி, சங்கராபரணம், கரகரப்பிரியா ஆகிய மேளங்கள் ஒலிக்கும்.
- எல்லா உருப்படிகளையும் இந்த இராகத்தில் காணலாம். சுலோகங்கள், பத்யங்கள், விருத்தங்கள் பாடு-வதற்கு ஏற்ற இராகம்.

- *ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம்*
- *விஸ்தாரமான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம்.*
- *தோடி சீதாராமையர் இந்த இராகத்தைப் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர்.*
- *கடபஜாதி ஸங்யைக்காக ஹனுமதோடி என அழைக்கப்பட்டது.*

**இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் *(3 புள்ளி)***

- *சஞ்சாரம் - பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகள், அங்க அடையாளங்கள் பயன்படுத்ததி எழுதியிருப்பின்* ***(1 புள்ளி)***
- *உருப்படிகள் -*

**பொருத்தமான எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் (2 புள்ளிகள்)**

***(1+2+2+1+3+1+2=12 புள்ளிகள்)***

03.

i. *பதவர்ணம்*

- *வர்ணத்தின் இரு பிரிவுகளில் இதுவும் ஒன்றாகும்.*
- *பதவர்ணம் நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படி வகையாகும்.*
- *இவை சௌக்க காலத்தில் அமைக்கப்பட்டிருக்கும்.*
- *அபூர்வமாக மத்திமகாலத்திலும் சில பதவர்ணங்கள் உண்டு.*

  உ+ம் - மனவிசேகொனராதா – சங்கராபரணம் - ஆதி

- *இதன் எல்லா அங்கங்களுக்கும் சாகித்தியம் அமைந்திருக்கும்.*
- *இவ்வர்ணத்தின் தாது ஆடுவதற்கும் மாது அபிநயத்திற்கும் ஏற்றதாக அமைந்திருக்கும்.*
- *இவை பெரும்பாலும் ஆதி, ரூபக தாளத்தில் அமைந்திருக்கும்.*
- *இவ்வர்ணத்தை ஆடவர்ணம், சௌக்கவர்ணம் என்றும் அழைப்பர்.*
- *ஜதிகள் உள்ள பதவர்ணங்களை பதஜதிவர்ணங்கள் என்று அழைப்பர்.*

***(இவ்விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் 4 புள்ளிகள்)***

*பதவர்ணங்களை இயற்றியவர்கள்*

- *இராமஸ்வாமிதீட்சிதர், முத்துஸ்வாமிதீட்சிதர், பல்லவி க்ஷேசய்யர், தஞ்சாவூர் வடிவேல் நட்டுவனார், இராமஸ்வாமிசிவன்* ***(இவர்களுள் ஒருவரைக் குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி)***

*பதவர்ணங்களுக்கு உதாரணம்*

- *ஸ்வாமி - நாட்டைக்குறிஞ்சி - ஆதி*
- *ஏமகுவ.... - தன்யாசி - ஆதி*

***(இவற்றுள் ஒன்றைக் குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி)***

ii. *ஹிந்துஸ்தானி இசை*

- *சர்வதேச இசை வகைகள் ஹிந்துஸ்தானி இசையும் ஒன்றாகும்.*
- *சங்கராபரண இராகம் ஹிந்துஸ்தானி இசையில் "பிலாவல்தாட்"க்கு ஒப்பானதாகும்.*
- *ஹிந்துஸ்தானி இசையில் பாடகர் தம் குரலுக்கு உகந்த சுருதியைத் தேர்ந்தெடுப்பதற்கு சுதந்திரம் உண்டு.*
- *ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் சங்கராபரண இராகம் ஆரம்ப இராகமாகக் கருதப்படுகின்றது.*
- *ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சியில் ஸிதார், ஸரோட், வயலின், ஸாரங்கி, தபேலா போன்ற வாத்தியங்கள் பயன்படுத்துகின்றன.*
- *ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சியின் போது சுருதிக்காகத் தம்புராவும் தாளத்திற்காகத் தபேலாவும் மாத்திரம் வாசிக்கப்படுகின்றன.*

- இன்று ஸாரங்கி தனிவாத்தியமாகவும் பக்க வாத்தியமாகவும் வாசிக்கப்படுகின்றது.
- ஹிந்துஸ்தானி இசைநிகழ்ச்சிகளைக் கேட்கும் போது அமைதி, சாந்தம் போன்ற உணர்வுகள் ஏற்படும்.
- ஹிந்துஸ்தானியில் மேளராகம் தாட் எனவும் தாளம் தால் எனவும் அழைக்கப்படும்.

**(இவற்றுள் 6 விடயங்கள் காணப்பட்டால் 6 புள்ளிகள்)**


iii. பூர்வாங்கம்

- பூர்வாங்கம் என்பது முற்பகுதி என்று பொருள்படும்.
- இது முன்னர் பாகம் என்றும் அழைக்கப்படும்.
- ஸரிகமபதநிஸ் என்ற அக்ஷ்டகத்தில் ஸரிகம என்பது பூர்வாங்கமாகும்.
- வர்ணத்தின் பல்லவி, அனுபல்லவி, முத்தாயீஸ்வரம் என்பன பூர்வாங்கமாகும்.
- 72 மேளகர்த்தாச் சக்கரத்தில் 1 – 6 வரையான சக்கரங்கள் பூர்வாங்கம் எனப்படும்.
- ஆறு சக்கரங்களிலும் உள்ள 1 - 36 வரையான இராகங்கள் பூர்வ மேளகர்த்தாக்கள் எனப்படும்.

**(6 புள்ளிகள்)**

04. i. ***மிருதங்க வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்கள் குறிக்கப்பட்டிருப்பின் 4 புள்ளிகள்***

***மிருதங்கத்தின் பாகங்கள்***




ii.

வாத்தியத்திரயத்தில் இது மூன்றாவதாக இடம்பெறுகின்றது.

கர்நாடக இசைக்கச்சேரிகளில் பிரதான தாளவாத்தியம்.

தமிழிசையில் மத்தளம், நான்முகன் என அழைக்கப்படுகின்றது.

சிவனது நாட்டியத்திற்கு வாசிப்பதற்காக படைக்கப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன.

தாள வாத்தியங்களுள் பிரதானமானது.

**(இவற்றுள் இரண்டு குறிப்பிட்டிருப்பின் 2 புள்ளிகள்)**

iii.

- மிருதங்கம் செய்யும் மரத்தின் உட்பாகம் கனமானதாகவும் ஓரம் லேசாகவும் அமையும் படி குடைந்து எடுப்பர். பின் மூட்டுப் போடுவர்
- மிருதங்கத்தின் நடுப்பாகம் பருத்தும் இருபுறமும் சிறுத்தும் காணப்படும்.
- வலப்புற இடப்புற மூட்டுத் தோலை இணைக்கும் கயிறு தோல்வார் எனப்படும். இதில் ஒவ்வொரு பக்கத்திலும் 16 கண்கள் காணப்படும்.
- இருபுறமும் உள்ள தோல் வளையங்களுள் வாரினை செருத்தி இழுத்துக் கட்டுவர்.
- மிருதங்கத்தின் உடலுக்கும் வாருக்கும் இடையில் உருளையான புள் என்னும் கட்டைகள் பொருத்தப்பட்டிருக்கும்.

- மிருதங்கக் கட்டையின் நடு வளையத்திற்கு அரடா என்பது பெயர்.
- மிருதங்கமானது சுமார் இரண்டு அடி நீளமானது. இடதுபக்கம் 6 அங்குல விட்டமும் வலதுபக்கம் 7 அங்குல விட்டமும் கொண்டதாக அமையும்.
- வலதுபக்கத்தை வலந்தலை எனவும் இடது பக்கத்தை இடந்தலை எனவும் அழைப்பர்.
- வலந்தலையின் மையத்தில் கறுப்பு நிறமான சோறு அல்லது கரணை வைக்கப்பட்டிருக்கும்.
- மிருதங்கத்தின் இடந்தலைக்குத் தொப்பி என்று பெயர். இது எருமைத்தோலாலும் ஆட்டுத்தோலாலும் செய்யப்பட்டுள்ளது. ***(2 புள்ளிகள்)***

iv.

- மூட்டினை இழுத்துப் பிணைக்கும் இடைவெளியில் காணப்படும் புள் என்ற மரத்துண்டினை நகர்த்துவதன் மூலம் சுருதி சேர்ப்பர்.
- மூட்டுப்பின்னலில் மேல்நோக்கித் தட்டினால் சுருதி குறைந்து ஒலிக்கும். கீழ்நோக்கித் தட்டினால் சுருதி கூடி ஒலிக்கும்.
- மிருதங்கத்தைச் சுருதி சேர்க்கையில் வலந்தலை பாடுபவரது ஆதார ஸட்ஜத்திற்கும் இடந்தலை மந்திரஸ்தாயி பஞ்சமம் அல்லது மந்திரஸ்தாயி ஸட்ஜத்திற்கும் சுருதி சேர்ப்பர்.
- மிருதங்கத்தில் தக்குஸ்தாயி மிருதங்கம் ஆண்கள் பாடும் போதும் ஹெச்சுஸ்தாயி மிருதங்கம் பெண்கள் பாடும் போதும் வாசிக்கப்படுகின்றது.
- தக்குஸ்தாயி மிருதங்கம் $\frac{1}{2}, 1, 1\frac{1}{2}, 2, 2\frac{1}{2}$ கட்டை சுருதி கொண்டிருக்கும்.
- ஹெச்சுஸ்தாயி மிருதங்கம் $4,\ 4\frac{1}{2}, 5, 5\frac{1}{2}$ சுருதியிலும் இருக்கும்.

***(2 புள்ளிகள்)***

v. துர்க்காராம் நாராயணசாமியப்பா, தஞ்சாவூர் வைத்தியநாதய்யர், புதுக்கோட்டை தட்சணாமூர்த்திப்பிள்ளை, பாலக்காடு மணிஐயர், நாச்சிமார்கோயில் அம்பலவாணர், திரு.சண்முகம்பிள்ளை

***(பொருத்தமான இசைக்கலைஞர்கள் இருவர்பெயர் குறிப்பிட்டிருப்பின் 2 புள்ளிகள்)***

05\. i. நாகபட்டணத்தில் நரிமணம் எனும் ஊரில் பிறந்தார்.

ii. 1810 – 1896

iii. a) நந்தனார்சரித்திரம், இயற்பகை நாயனார் சரித்திரம், காரைக்காலம்மையார் சரித்திரம், திருநீலகண்ட நாயனார் சரித்திரம்

***(இவற்றுள் இரண்டு குறிப்பிட்டிருப்பின் 2 புள்ளிகள்)***

b) "சபாபதிக்க வேறு தெய்வம்…", "திருவடிசரணம்…", "தில்லைத்தலம்….", "நடனமாடினார்…", "கனகசபேசன் சேவடி….", "கண்ணாலே கண்டேன்…"

***(இவற்றுள் இரண்டு குறிப்பிட்டிருப்பின் 2 புள்ளிகள்)***

iv. சிதம்பரம் பொன்னுசாமி தீட்சிதர், சிதம்பரம் ஸ்ரீராஜரத்தின தீட்சிதர், மாயூரம் ராமசாமிஐயர், மாயூரம் நடேசய்யர், மாயூரம் சுப்பிரமணிஐயர்

***(இவர்களுள் இருவரைக் குறிப்பிட்டிருப்பின் 2 புள்ளிகள்)***

v. "கோபாலகிருக்ஷ்ண", "பாலகிருக்ஷ்ண" ***(1 புள்ளி)***

06.

இராகம் :- மாயாமாளவகௌளை ஆ :- ஸரிகமபதநிஸ்

இயற்றியவர் :- ஸ்ரீபுரந்தரதாசர் அ :- ஸ்நிதபமகரிஸ

அட்சர எண்ணிக்கை :- 14 15வது மேளராகம்

| \|5 | \|5 | 0 | 0 |
|---|---|---|---|
| ஸரீகா / | ஸாரிகா / | மா / | மா // |
| ரிகாமா / | ரீகமா / | பா / | பா // |
| கமாபா / | காமபா / | தா / | தா // |
| மபாதா / | மாபதா / | நீ / | நீ // |
| பதாநீ / | பாதநீ / | ஸ்ா / | ஸ்ா // |
| ஸ்நீதா / | ஸ்ாநிதா / | பா / | பா // |
| நிதாபா / | நீதபா / | மா / | மா // |
| தபாமா / | தாபமா / | கா / | கா // |
| பமாகா / | பாமகா / | ரீ / | ரீ // |
| மகாரீ / | மாகரீ / | ஸா / | ஸா // |

07. i. ஸப்ததாளங்களாகிய துருவம், மட்டியம், ரூபகம், ஜம்பை, திருபுடை, அட, ஏகம் ஆகியன திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம் ஆகிய லகுவின் ஜாதிபேதங்களினால் 7x5=35 தாளங்களாகின்றன. **(2 புள்ளிகள்)**

ii. துருவதாளம்

| ஜாதிகள் | அங்கம் | மொத்த அட்சரம் |
|---|---|---|
| **துருவதாளம்** | | |
| திஸ்ரஜாதி துருவதாளம் | \|3 0 \|3 \|3 | 3 + 2 + 3 + 3 = 11 |
| சதுஸ்ரஜாதி துருவதாளம் | \|4 0 \|4 \|4 | 4 + 2 + 4 + 4 =14 |
| கண்டஜாதி துருவதாளம் | \|5 0 \|5 \|5 | 5 + 2 + 5 + 5 = 17 |
| மிஸ்ரஜாதி துருவதாளம் | \|7 0 \|7 \|7 | 7 + 2 + 7 + 7 = 23 |
| சங்கீரணஜாதி துருவதாளம் | \|9 0 \|9 \|9 | 9 + 2 + 9 + 9 = 29 |
| **ரூபகதாளம்** | | |
| திஸ்ரஜாதி ரூபகதாளம் | 0 \|3 | 2 + 3 = 5 |
| சதுஸ்ரஜாதி ரூபகதாளம் | 0 \|4 | 2 + 4 =6 |
| கண்டஜாதி ரூபகதாளம் | 0 \|5 | 2 + 5 = 7 |
| மிஸ்ரஜாதி ரூபகதாளம் | 0 \|7 | 2 + 7 = 9 |
| சங்கீரணஜாதி ரூபகதாளம் | 0 \|9 | 2 + 9 = 11 |

**(10 புள்ளிகள்)**

இந்தியாவில் 17ம் 18ம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாச்சாரப்பின்னணி

- 16ம் நூற்றாண்டில் மாயாமாளவகௌளை இராகத்தில் ஆரம்பவரிசைகள் பாடப்படவேண்டும் என்ற ஓர் வழக்கத்தைக் கொண்டு வந்து ஓர் புதிய கலாசாரத்தை ஆரம்பித்தமையால் புரந்தரதாசர் “ஆதிகுரு”, “சங்கீத பிதாமகர்” என்று போற்றப்படுகின்றார்.
- புரந்தரதாசர் கன்னடமொழியில் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளையும் தேவர்நாமாக்களையும் “புரந்தரவிட்டல” என்ற முத்திரையுடன் இயற்றினார்.
- தற்போது வழக்கிலுள்ள 24 மெட்டுக்களுடன் கூடிய வீணை சர்வராகமேள வீணை என்னும் பெயரால் இராமாமாத்தையரால் எழுதப்பட்ட ஸ்வரமேளகலாநிதி என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 12 ஸ்வரஸ்தானங்களையும் 16 ஸ்வரப்பெயர்களையும் கொண்டு 72 மேளகர்த்தாக்களை வகுத்து வெங்கடமகி அவர்கள் “சதுர்தண்டிப் பிரகாசிகை” யில் குறிப்பிட்டுள்ளார்.
- தற்போது நாம் பயன்படுத்தும் கிரமசம்பூர்ண ஆரோகண அவரோகணத்துடன் கூடிய 72 மேளகர்த்தாக்களுக்கு கனகாங்கி ரத்னாங்கி எனும் பெயர்த்தொகுதியை 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த கோவிந்தாச்சாரியார் அவர்கள் “சங்கிரகசூடாமணி” என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.
- இக்காலப்பகுதியில் தருக்கள், விருத்தங்கள் மூலம் இராமநாடகம் என்னும் இசை நாடகத்தை அருணாசலக் கவிராயர் அவர்கள் தமிழில் இயற்றினார். சீர்காழி ஸ்தலபுராணம், ஹனுமார் பிள்ளைத்தமிழ், சீர்காழிக்கோவை, அசோகமுகி நாடகம் ஆகியவற்றையும் எழுதியுள்ளார்.
- திருகூட இராசப்பக்கவிராயரால் குற்றாலக் குறவஞ்சி எழுதப்பட்டது.
- ஆயிரக்கணக்கான கீதங்களை பைடாலகுருமூர்த்தி சாஸ்திரிகள் இயற்றியமை. இதனால் இவர் வெயிகீத என்ற சிறப்பும் பெயர் பெற்றார்.
- இக்காலப்பகுதியில் தமிழில் கீர்த்தனைகளையும் பேரின்பப் பதங்களையும் முத்துத் தாண்டவர் அவர்கள் இயற்றினார்.
- இக்காலத்திலேயே கிருதிகள், சமுதாயக் கீர்த்தனைகள், கொத்துக் கீர்த்தனைகள், தியாகராஜரால் இயற்றப்பட்டன.
- க்ஷேத்ரக்ஞர் நாயகன் நாயகி பாவத்தை அடிப்படையாகக் கொண்டு தெலுங்கு மொழியில் ஆயிரக்கணக்கான பதங்களை இயற்றினார்.
- பத்ராசலம் இராமதாசர் இயற்றிய கீர்த்தனைகள் மூலம் பக்திப்பிரவாகத்தை வெளிப்படுத்தலாம் என்பதை அறியலாம்.
- இக்காலப்பகுதியில் வாழ்ந்த சியாமாசாஸ்திரிகளால் இயற்றப்பட்ட நவரத்தின மாலிகைக் கிருதிகள் பிரசித்தமானவை. ஸரபநந்நன தாளத்தில் பல்லவி பாடியவர் விலோமசாபு தாளத்தில் உருப்படிகளை இயற்றியவர் ஸ்வராட்சர அணிகள் இவரது படைப்புக்களில் புகுத்தப்பட்டன.
- இவர்கள் காலத்திலேயே கனம் கிருஷ்ணையரும் வைத்தீஸ்வரன் கோயில் சுப்பராமஐயரும் தமிழில் பதங்களை இயற்றினர்.
- கனம் என்னும் மார்க்கத்தை பொப்பிலி கேசவையா சாதித்துக் காட்டினார்.
- பலவித இசையணிகள் அறிமுகப்படுத்தியமை
- சங்கீத மும்மூர்த்திகளின் இசைத்தொண்டினால் 18ம் நூற்றாண்டின் பிற்பகுதி சங்கீத வளர்ச்சியில் ஒரு பொற்காலம் எனப்பட்டது. இக்காலத்திலேயே குருகுலவாச முறை வழக்கத்திற்கு வந்தது.
- பச்சிமிரியம் ஆதியப்பையர் தானவர்ணமார்க்கதரிசி என சிறப்புப்பெற்றார்.
- தசவித கமகங்களையும் வெளிப்படுத்தும் “விரிபோணி…” என்ற பைரவி ராக அடதாள வர்ணத்தை இயற்றியவரும் இவரே.

**(இவற்றுள் 12 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் 12 புள்ளிகள்)**